உ

ஸ்ரீ முருகன் துணை.

இடும்பன் பதிகமும் முருகர் கோலாட்டப் பாட்டும்

இஃது

நாகபட்டணம்

பிர்ம்மஸ்ரீ கே. திருமேனி ஆச்சாரியாரவர்கள் குமாரர்

தி. சோக்கலிங்கதாசன் பாடியதை

ஷையார் மாணாக்கர் மகா-ஸ்ரீ ரா. கோபாலசாமிபிள்ளை

அவர்கள் முயற்சியால்

நாகபட்டணம்

பிரின்ஸ் ஆப் வேல்ஸ், அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1924.

விலை 1

இடும்பன் பதிகம்

வெண்பா.

கொடும் பகைஞர் வேரறுக்க குன்றெறிந்த மாய்க்கும்
இடும்பன் பதிகமிபய்பிடவே — நெடும்புவியில்
நல்லபதம் நல்லபொருள் நாடுமேயக் காதரவாய்
வல்லவையின் பாகமேன முன்வா.

ஆசிரிய விருத்தம்.

1 அலைகடற் சூழ்புவியிற் பலியெனத் தோன்றிடும்
அற்புதப் புஜவலிமையும
ஆங்கார வதனமும ஓங்கார ரூபமும்
ஆரபாரச் செய்கையும
குலைநடுங்கிட அவுணர் கிலைகுலைந் தோடிடக்
குன்றைவிட் டெறிகல்லவா
கோபாக்னி சிதறவே தாபாக்னி யாலுதிரு
கோலங்கொள் அதிபிடியபா

சிலையொத்த சரமீது தெண்டாயுதப் பொலிவும்
சிரசில்ரத்ன கிரீடமும்
ஜெகமெலாம் புகழ்பெற்ற மார்பிற் பதக்கமும்
செய்பசங் கனகடகமும்
ஜலஜமென ஜொலிவீசு இடையினிற் சல்லடம்
தாள்பொற் சதங்கையுடனே
சமரில்ஜெய பிரபுவே அமரர்புகழ் மேருவே
சயபமீ இடும்பத்துரையே

2 அண்ட[illegible] திருப்புத்தண்ட கோலாகால
ஆறுமுக நற்சேவகா
அன்பாகளின் முறைகேட்டு எங்கள் பங்கில்வந்
தமர்ந்தருளுவீர் கடம்பா
தென்[illegible] தின்னமொரு தாங்கினோர் தால்மனச்
சிந்தனையெலாம் பாருமே

இடும்பன் பதிகம்.

ஜென்மசா பல்யமாம் பூசப் பசாசுகள்
சீறுபருகந்த முனிவரை
கண்ட துண்டம்செய்து உயிர்பலி கொள்வீரனே
கருதுபசத் ராதிகளிசையும
காலகிர கர் நிறைல் பிலலிரு மியம்வைப்பு
காலுறுதந் தது விடுவாய்
சண்டமாக கூட வே தெண்டாயு தத்தினால்
ஜாடியே வேட்டையாடாய்
சமரில்ஜெய பிரபுவே அமரர்புகழ் மேருவே
சமயம் இடும்பதுரையே

3 அருமறைக ளிறையவடி யவர்களடி பரவயெழில்
அண்டர்கோளமு மதிரவே
அழகுமயில் மிசைநடன மிடுகுமர குருபரன்
அகமகிழ நற்றாதனே
மருவலரை யொடிபிளை திருபுருவம் நெறியவே
மதகஜ மமைப்புகுந்து
படமாடை நெருக்கிறை நெருக்கிறை வாரிமுகில்
மண்டலங் குவிபவிடுவாய்

திருநிறையு மணிமார்ப வந்தகனை னுனதடிமை
தேடுமென் விழிகள்காண
ஜெகதலம் புகழ்ப்பெரு தருபதியனே வருணைமயினி
சிறுவனென் சிந்தைமகிழ
கருணையுன திருகமல பதமலரை நம்பினேன்
க்ஷமியுமென் குற்றங்களை
சமரில்ஜெய பிரபுவே அமரர்புகழ் மேருவே
சமயம் இடும்பதுரையே

4 இன்றுநாள் வரைக்குமுனை எண்ணென்ன பாதகம்
இயற்றினேனோ அறிகிலேன்
இடாது குற்றங்கள்செய் திருந்தபோதிலு மென்னை
ஈடேற்றி அருள்புரிகுவாய்
அன்னைநீ தந்தைநீ ஆசான்நீ தெய்வம்நீ
அபக்துவேனாதனில
அபயகர மீய்வாய் உபயபாதத்தன்னை
அன்புடனளிப்பவனும்நீ

பன்னிருகை வேலனுக் குண்மையா னவனும்நீ
பகருமவ்வும் சவ்வும்நீ
பாருதி அண்டம்நீ தோருகமுண்டம்நீ
பாக்யமருள் பரமநீயே

தன்னேரிலாதமா அண்டப்ரசண்டநீ
        தமியேற்குன் னருள்புரிகுவாய்
சமரில்ஜெய பிரபுவே அமரர்புகழ் மேருவே
        சமயமீ திடும்பதுரையே

5 உடலுயிர்ப் பொருளெலாம் உனது காணிக்கையென்
        றோர்ந்தெனை யுளங்கனிந்து
உண்மையே தெய்வமென் றெண்ணியே கண்ணினேன்
        உதவிசெயும் வல்லிடும்பா
படமெடுத் தாடுமர வத்தின்வாய்த் தேரைபோல்
        பரதவித் திடுமேழையான்
பாரிற் றகாதபிழை யாதுசெய் திடினுமெனை
        பாலிப்ப துன்பாரமே
மடலவிழ்ந் தொழுகுதேன் பூங்கடம் பணியுமணி
        மார்பனே வல்லிடும்பா
வரைகளொரு விரலினால் திரிபெலனே சுழல
        வானிலிட் டெறிதீரனே
தடமருவு புயவீர சல்லாப சுந்தர
        தமியேற்குன் னருள்புரிகுவாய்
சமரில்ஜெய பிரபுவே அமரர்புகழ் மேருவே
        சமயமீ திடும்பதுரையே

6 எக்காலமு முனதுதிரு பொற்கால் வணங்கிநின்
        றேற்றுதற் கருள்புரியவும்
எழில்மிகும் பெரியோர்கள் மொழியும் வழிசெகா
        நிசைந்ததன் படிவாழவும்
மைக்கால் விடநிசர் பாத்தையர்கள் மேல்மையல்
        வைப்பதை விட்டொழியவும்
பாண நேரந்தனிலே வாசிவாசி வசியெனும்
        மந்திரங்களை யோதவும்
அக்கால மதனிலெம படர்களணு காதபடி
        அருகிருந் தெனையாளவும்
அந்தரங் கந்தமியே னுடன்தனுயிர் கொண்டுபோய்
        அறுமுகவ னடிசேர்க்கவும்
தக்கோல மென்றுநீகர் வாயனை நேயனே
        தமியேற்குன் னருள்புரிகுவாய்
சமரில்ஜெய பிரபுவே அமரர்புகழ் மேருவே
        சமயமீ திடும்பதுரையே

7 ஏகபர னுருவமே சோக மகிழ்ந்தாத
        எழில்பெருகு வல்லிடும்பா

இடும்பன் பதிகம்.

என்றுமேதெலாம் பெண்ணி என்மனங் குன்றுதே
ஏழைநா னென்னசெய்வேன்
யோகமடவார்மயமெலாழ்ந்துமதி தவறுமிகு
மூர்க்கனு னைபோதுமே
முழுதுமெனை அனாமதனில் கலகினை வுடன்றுதியா
மூடனு றுனபோதும்
தேகங்கிலேயல்லவே ஆனையா லிப்பிறவி
திருமுன் செக்காத பகிழ்வாய்
செய்செய்த பிழைகளைத் தாய்பொறுப்பதுபோல
இழுவனென் குறைபொறுப்பீர்
ஈகரம் சூழ் புவியில் வாகுடனே நம்பினேன்
தமியேற்குன்னருள் புரிகுவாய்
சமரில் ஜெயபிரபுவே அமரர்புகழ் மேருவே
சமயமீதிடும்ப துரையே

8 ஐயமிடுவார்களை செய்யாதே என்றனே
அரியபாவியால் வந்தவர்க
கழுதில்லை யென்றனே சமயமதிலுதவினோர்க்
காகாத பழிசெய்தனே
நொய்யவயர் பெற்றதாய் தந்தையர் மனங்களை
நோகும்படிச் செய்தனே
நோக்கி வுறவோர்களை வாக்கில் வந்ததுசொல்லி
நடபமாயெண்ணினனே
துய்யமனதுடையோரை வைதேனே நையவே
சோருறவாடி பாவத்
தொழிலது புரிந்தனே அறிவிலச்சிறுவன் யான்
தோன்றியேலறென்றுமையா
சையொத்திருந்தெனது சஞ்சலமதகலவே
தமியேற்குன்னருள் புரிகுவாய்
சமரில் ஜெயபிரபுவே அமரர்புகழ் மேருவே
சமயமீதிடும்பதுரையே

9 ஓங்கார ரூபமுடன் உத்தண்ட மாகவே
ஓடிவா வல்லிடும்பா
உற்றவென மனப்பாக்கு நற்காய மதனை
உலைத்துத்தேளிடும்பா
ஹுங்காரமான டாகினி பூத பைசாச
மணவிலாப் பில்லிசூன்யம்
அனுவளவு மெனையணுகாததமாகவே செயும்
அற்புதம் செரிடும்பா

நீங்காத பேரின்ப வாழ்வுபெற வெண்ணியே
நினையண்டினே னிடும்பா
நீடுலகி லுன்னைவிட வேறுகெதி யில்லையிது
நிச்சயம் வல்லிடும்பா
தாங்காத வறுமையால் தத்தளிக் காமலே
தமியேற்குன் னருள்புரிகுவாய்
சமரில்ஜெய பிரபுவே அமரர்புகழ் மேருவே
சமயமீ திடும்பதுரையே

10 ஒளவியம் பேசுவ தகற்றவும் கொலைகளவு
தானதிற் செயனீக்கவும்
அங்கார மென்றவெம் புலிதனை யடக்கவும்
அறிவிற் சிறந்த பெரியோர்
ஒவ்வும்படிக் கொழுக வுறுதி மதுதனை
உபயோகியா தருளவும்
உன்னைமற வாமலே யனவரதந்துதி செய்கின்ற
உத்தமருடன் கூடவும்
கொவ்வையிதழ் மாதர்களின் மையலில் விழாமல்
குதூகலத் துடன்வாழவும்
கோட்சொல்லி பிறர்கெடுக்க நாட்களுடை பொல்லாத
குடிகேடு மென்றையனும்
சன்னியம காகவுனை சரணமெய் தகமகிழ
தமியேற்குன் னருள்புரிகுவாய்
சமரில்ஜெய பிரபுவே அமரர்புகழ் மேருவே
சமயமீ திடும்பதுரையே

11 அக்கர மதற்குரிய வஸ்துவடிவ மெங்கள்
அத்திமுக னடிகள் வாழி
ஆறுமுகமான குமரேசர் பொற்பதம் வாழி
யானைகுற மங்கைவாழி
குக்குடத்துவஜம் வேல்வாழி மயில்வாழி யெங்
கோமா னிடும்பன்வாழி
குன்றுவில்லியுமை வாழி மங்கை பார்வதிவாழி
கூறுதிரு மாலும்வாழி

மிக்கபுகழ் பிரமன்சரஸ் வதிவாழி ரவிமதிதன்
மேகந் தழைக்கவாழி
விண்ணவர்கள் வாழியிப் பதிகம் படிப்பவர்கள்
வினயமாய்க் கேட்போர்வாழி
தக்க பெரியோர்வாழி சொக்கலிங்கம் தமிழ்
தழைத்தென்றும் வாழிவாழி

சமரில்ஜெய பிரபுவே அமரர்புகழ் மேருவே
சமயம் இடும்பதுரையே

கோலாட்டப் பாட்டு.

1 ஆங்கார வல்லிடும்பனே — அகோரவீர
ஆதார வல்லிடும்பனே

2 ஓங்கார வல்லிடும்பனே — இதே தருணம்
ஓடிவா வல்லிடும்பனே

3 ஸ்ரீங்கார வல்லிடும்பனே — சிவயநம
சித்திதரும் வல்லிடும்பனே

4 ரீங்கார வல்லிடும்பனே — வசியநம
செல்வந்தரு வல்லிடும்பனே

5 பாலரைக் காரிடும்பனே — இதுதருணம்
பக்கத்தமரிடும்பனே

6 சொக்கலிங்கம் சொல்லிடும்பனே — மைந்தர்களுக்கு
துணைசெய்யும் வல்லிடும்பனே

வேறு தரம்.

1 ஆதிகணநாதன்திரு அடியிணையைப்போற்றி — எங்கள்
ஆறுமுகன் துதிசொல்லுவேன் அவையுள்ளோரை யேற்றி

2 திருமால்மருகா பெட்டுதேடி வாமுருகையா — தேடி
வந்தேன்உந்தன் சந்நிதிக்கே என்னையாளுமையா

3 அருள்முருகா திருமுருகா ஆறிருகைமுருகா — எமன்
காதரவாய் வந்தமரும் அழகியவேல்முருகா

4 சரவணையிலவதரிக்க தணிகைவளர் முருகா — எந்தன்
சஞ்சலமகற்றியருள் சத்திவேற்கை முருகா

5 ஏறுமயிலேறிவிளையாடிவரு முருகா — இந்த
எத்திசையும் போற்றிடவே முத்திநல்கு முருகா

6 கோருமடியார்களையாட் கொண்டருளு முருகா — திருக்
குன்றுதோறும் நின்றுமனக் குறைதவிர்க்கு முருகா

7 ஒருபொழுதும் உனைமறவேன் உம்பர்போற்று முருகா — எனக்
குற்றதுணை மற்றோரில்லே உதவிசெய்யு முருகா

8 இருவினையைத்தீர்த்தருளும் எழில்பெருகு முருகா — பொல்லா
இடரனைத்தும் விலகச்செய்யும் ஏந்தியவேல் முருகா

9 வள்ளிதெய்வ யானையுடன் வந்தருளு முருகா அந்த
வானவர்கள் சிறைதவிர்த்த மோனரூபக முருகா

10 சொக்கலிங்கம் பாடிதுதி சொல்லும்ஞான முருகா எந்தன்
துன்பம்தவிர்த் தெந்தநாளும் சுகமருளு முருகா

வேறு கவாய்—ஏகதாளம்.

செந்தூரமரும் கந்தனை—தேவாதிபனை

தேன்கமழ்மலர்ப்-பூங்குயிலிசை
ஓங்கும்நற்பொழில்-சூழ்ந்திடும்திருச் (செந்)

சிறுவயதினில்-அரனுக்கரிய
பிரணவந்தனை-உரைபுரிந்திட (செந்)

சினந்த சூரரைக்-கணத்தில் சிரத்தை
அணித்த வெற்றிவே-லெடுத்த சுப்பிரம (செந்)

தேவ யானையை-அவனுடனே
பூமணம்புரி-சேவல்கொடி (செந்)

தெள்ளிய மாலை-வள்ளிபுனைய
கொள்ளுறுபாப-கள்ளவிழ்தீப (செந்)

திருமருவிய-அரிமருகனை
ஒருபொழுதும்நின்-சரண்மறவேனே (செந்)

தேகம்நிலையோ-ஆகையாலருள்
யோகமேமயில்-வாகனாதிருச் (செந்)

இக்கவிணையல்லது-புக்கவேறிலையே
சொக்கலிங்கதாச-அக்கருள்செய்திருச் (செந்)

முற்றிற்று

P.W.P.N.